VISIT…

http://pkp.blogspot.com

குழந்தைகள் பாடல்கள்

அம்மா இங்கே வா

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போடு
ஈயை தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லவர்
ஊரில் யாரோ உள்ளவர்
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இனி இல்லை
ஐயம் இன்றி சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஔவை சொன்ன மொழியாம்
அ·தே எனக்கு வழியாம்

ஒன்னு ரெண்டு மூனு

ஒன்னு ரெண்டு மூனு
ஓனான் எங்கே கூறு
நாலு அஞ்சு ஆறு
மாரத்தின் மேலே பாரு
ஏழு எட்டு ஒன்பது
எனன அதன் பேரு
ஓனான் என்றே கூறு

கைவீசம்மா கைவீசு

கைவீ சம்மா கைவீசு!
கடைக்குப் போகலாம் கைவீசு!
மிட்டாய் வாங்கலாம் கைவீசு!
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு!

அப்பம் வாங்கலாம் கைவீசு!
அமர்ந்து தின்னலாம் கைவீசு!
பூந்தி வாங்கலாம் கைவீசு!
பொருந்தி யுண்ணலாம் கைவீசு!
பழங்கள் வாங்கலாம் கைவீசு!
பரிந்து புசிக்கலாம் கைவீசு!

சொக்காய் வாங்கலாம் கைவீசு!
சொகுசாய்ப் போடலாம் கைவீசு!
கோயிலுக்குப் போகலாம் கைவீசு!
கும்பிட்டு வரலாம் கைவீசு!
தேரைப் பார்க்கலாம் கைவீசு!
திரும்பி வரலாம் கைவீசு!
கம்மல் வாங்கலாம் கைவீசு!
காதில் மாட்டல்லாம் கைவீசு!

ஆராரோ ஆரிவரோ

ஆராரோ ஆரிவரோ, ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய் கண்மணியே கணணுறங்காய்
பாட்டி அடித்தாளோ, பாலூட்டும் கையாலே
அத்தை அடித்தாளோ, அமுதூட்டும் கையாலே
ஆராரோ ஆரிவரோ, ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய் கண்மணியே கணணுறங்காய்

நிலா நிலா ஓடி
நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மீது ஏறிவா
மல்லிகைப்பூ கொண்டுவா

வட்ட வட்ட நிலவே
வண்ண முகில் பூவே
பட்டம் போல பறந்து வா
பம்பரம் போல் சுற்றி வா

ஒன்றும் ஒன்றும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு
இரண்டும் இரண்டும் நான்கு
இனிப்பாய் இருக்கும் தேங்காய்
மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு
நான்கும் நானகும் எட்டு
நன்றாய்ப் பாடுவாள் பட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அன்பே நமது சொத்து

மழையே மழையே வா வா

மழையே மழையே வா வா
மரங்கள் வளர வா வா
உலகம் செழிக்க வா வா
உழவர் மகிழ வா வா
குளங்கள் நிரைய வா வா
குடைகள் பிடிக்க வா வா
ஆறு ஓட வா வா
அட்ட போட ஓடி வா

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக் கிளியே சாய்ந்தாடு
தித்திக்கும் தேன சாய்ந்தாடு
தெவிட்டாத தமிழே சாய்ந்தாடு

மயிலே குயிலே சாய்ந்தாடு
மாடப்புறாவே சாய்ந்தாடு
கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
காய்ச்சிய பாலே சாய்ந்தாட

குத்துவிளக்கே சாய்ந்தாடு
குட்டி நிலவே சாய்ந்தாடு

மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
அல்வா போன்ற மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா மாம்பழம்

இங்கே ஓடி வாருங்கள்
பங்கு போட்டு தினனலாம்

அழகர் யானை

ஆனை ஆனை
அழகர் ஆனை

அழகரும் சொக்கரும்
ஏறும் ஆனை

கட்டிக்கரும்பை
முறிக்கும் ஆனை

காவேரி தண்ணீரை
கலக்கும் ஆனை

குட்டி ஆனைக்குக்
கொம்பு முளைச்சுதாம்

பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்!

பலூன்

பத்துக் காசு விலையிலே
பலூன் ஒன்று வாங்கினேன்
பலூன் ஒன்று வாங்கினேன்
பையப் பைய ஊதினேன்

பையப் பைய ஊதவே
பந்து போல ஆனது
பந்து போல ஆனதும்
பலமாய் நானும் ஊதினேன்

பலமாய் நானும் ஊதவே
பானை போல ஆனது
பானை போல ஆனதை
பார்க்க ஓடி வாருங்கள்

விரைவில் வந்தால் பார்க்கலாம்
அல்லது வெடிக்கும் சத்தம் கேட்கலாம்

சேர்ந்து செய்வோம்

துண்டுத் தாள்கள் கிடந்தன
தூக்கி வீசி எறிந்தனர்!
கண்டு சிறுவன் எடுத்தனன்
கப்பல் செய்து மகிழ்ந்தனன்!

துண்டுத் துணிகள் கிடந்தன
தூக்கி வீசி எறிந்தனர்!
கண்டு சிறுமி எடுத்தனள்
கணக்காய்ப் பொம்மை செய்தனள்!

வண்ணத் தாள்கள் கிடந்தன
வாரி வீசி எறிந்தனர்!
சின்னப் பையன் கண்டனன்
சேர்த்துப் பூக்கள் செய்தனன்!

சிறிய துரும்பும் நமக்குமே
சிறந்த பொருளாய் மாறுமே!
சின்னஞ் சிறுவர் நாமுமே
சேர்ந்து பொருள்கள் செய்வோமே!

பாப்பா

குட்டி குட்டி பாப்பா
குண்டு கன்னம் பாப்பா
தத்தி தத்தி நடந்திடும்
கட்டித் தங்க பாப்பா

கண்கள் உருட்டி மிரட்டுவாள்
வாய் பொத்தி சிரிக்கும் பாப்பா
சுட்டித்தனம் செய்திடும்
எங்கள் சக்தி பாப்பா

நல்ல நாய்க்குட்டி

சின்னச் சினன நாய்க்குட்டி
தூய வெள்ளை நாய்க்குட்டி

பஞ்சுப் பொதி நாய்க்குட்டி
பன்னும் தின்னும் நாய்க்குட்டி

சின்னச் சின்னக் குழந்தைகள்
கொஞ்சி மகிழும் நாய்க்குட்டி

உன்னைக் கண்டால் பிஞ்சுகள்
நெஞ்சம் மகிழ்ச்சி கொள்ளுமே!

துள்ளித் துள்ளி ஓடுவாய்
உன்னை அள்ளி அள்ளித் தூக்கலாம்

வாசலிலே மற்றவர் வந்து
நின்றால் போதுமே!
சிங்க கர்ஜனை செய்வாயே!

சிறுவர் விரும்பும் நாய்க்குட்டி
பாலும் ரொட்டியும் பாந்தமாய்
தந்து விட்டால் போதுமே!

வாலை வாலை ஆட்டியே
வரவேற்பு தருவாயே!

வேண்டும் முயற்சி

சிலந்தி வலையை பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே!

தேனிக் கூட்டை பாருங்கள்
திறமை யோடு ஒற்றுமை
பேணி வீட்டைக் கட்டுமே
பெரிய முயற்சி வேண்டுமே

எறும்புப் புற்றைப் பாருங்கள்
எளளைப் போன்ற எறும்புகள்
அருமையான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன

குருவிக் கூட்டைப் பாருங்கள்
குடுக்கை போன்று பின்னியே
விரைவில் கட்டி முடிக்குமே
வேண்டும் முயற்சி என்றுமே!-

லட்டும் தட்டும்

வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு.

எட்டில் பாதி விட்டு,
எடுத்தான் மீதம் கிட்டு.

மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு.

கிட்டு நான்கு லட்டு,
பட்டு நான்கு லட்டு,
மொத்தம் தீர்ந்த தெட்டு
மீதம் காலித் தட்டு

மழை

வானத்திலே திருவிழா
வழக்கமான ஒருவிழா

இடியிடிக்கும் மேகங்கள்
இறங்கி வரும் தாளங்கள்

மின்னலொரு நாட்டியம்
மேடை வான மண்டபம்

தூறலொரு தோரணம்
தூய மழை காரணம்

எட்டு திக்கும் காற்றிலே
ஏக வெள்ளம் ஆற்றிலே

தெருவெங்கும் வெள்ளமே
திண்ணையோரம் செல்லுமே

தவளை கூட பாடுமே
தண்ணீரிலே ஆடுமே

அகன்ற வெளி வேடிக்கை
ஆண்டு தோறும் வாடிக்கை

http://pkp.blogspot.com

மழை வருது

மழை வருது மழை வருது
நெல்லு குத்துங்க,

முக்காப் படி அரிசி போட்டு
முறுக்கு சுடுங்க

தேடி வரும் மாப்பிள்ளைக்கு
எடுத்து வையுங்க,

சும்மா வரும் மாப்பிள்ளைக்கு
சூடு வையுங்க.

அணிலே அணிலே

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டு பழம் கொண்டு வா
பாதி பழம் என்னிடம்
பாதி பழம் உன்னிடம்
கூடி சேர்ந்து இருவரும்
கொரித்து கொரித்து தின்னலாம்

ஆத்திசூடி

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்

காக்கா காக்கா

காக்கா காக்கா
கண்ணுக்கு மை கொண்டு வா
குருவி குருவி
கொண்டைக்குப் பூக்கொண்டு வா
கிளியே கிளியே
கிண்ணத்தில் பால் கொண்டு வா
கொக்கே கொக்கே
குழந்தைக்கு தேன் கொண்டு வா

http://pkp.blogspot.com

அம்மா

அம்மா அம்மா என்னம்மா
அழகாய் முத்தம் தந்திடுவாய்
கண்ணைப் போல என்னையே
காக்கும் கருனை தெய்வம் நீ
அம்மா நானும் வளர்ந்திடுவேன்
உலகம் எல்லாம் புகழ்ந்திடுவேன்

குள்ள வாத்து

குள்ள குள்ள வாத்து
குவா குவா வாத்து
மெல்ல உடலைச் சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
செல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து

சின்னப் பூனை

சின்னச் சின்னப் பூனையாம்
சீறிப் பாயும் பூனையாம்
கன்னங்கரியப் பூனையாம்
கருப்பு மீசைப் பூனையாம்
இரவில் சுற்றும் பூனையாம்
எலியைப் பிடிக்கும் பூனையாம்
புலியைப் போன்ற பூனையாம்
புத்திசாலிப் பூனையாம்

தோசை

தோசை அம்மா தோசை
அரிசி மாவும் உளுந்த மாவும்
கலந்து சுட்ட தோசை
அப்பாவிற்கு நான்கு
அண்ண்னுக்கு மூன்று
அக்காவுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று
சீனி நெய்யும் சேர்த்து
கூடி கூடி உண்போம்

பொம்மை

பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்
கையை வீசும் பொம்மை பார்
கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்
தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்
எனக்கு கிடைத்த பொம்மை போல்
ஏதும் இல்லை உலகிலே

http://pkp.blogspot.com

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகம் எல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்வலமாம், ஒட்டகசிவிங்கி நாட்டியமாம்
ஊர் குறுவி பின்பாட்டாம்
அற்புதமான சாப்பாடாம்
தாலி கட்டும் நேரத்துல மாப்பிளை பூனைய காணமாம்
வந்தவர் எல்லாம் திட்டினராம்
வருத்தம் கொண்டு திரும்பினராம்
பக்கத்து வீட்டு பாலை தினம் திருடி அதுவும் குடித்ததாம்
திருட்டு பூனைக்கு "என் பெண்ணை திருமணம்
செய்து தரமாட்டேன்"
வந்த இந்த சம்மதம் வெட்க்க கேடு போய் வரலாம